Registered as a NewsPaper

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-iv




நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | ஆவணி-10 | 26-08-2005 | வெள்ளிக்கிழமை | ஓசை-190

## கேணல் ராயுவின் 3ஆம் ஆண்டு நினைவு நிகழ்வில் தேசியத்தலைவர் வே.பிரபாகரன்





# பேச்சுவார்த்தை இடம் குறித்த அரசின் நிலைப்பாடு புலிகளால் நிராகரிப்பு!

## அரசு விரும்பின் கிளிநொச்சியில் பேசலாம்

*(கிளிநொச்சி)*

**யுத்தநிறுத்த உடன்பாட்டின் அமுலாக்கம் தொடர்பான பேச்சுவார்த்தையினை இராணுவ கட்டுப்பாட்டுப்பிரதேசத்திலோ, அன்றி இராணுவ சூனியப்பிரதேசத்திலோ நடாத்தலாம் என்ற அரசின் ஆலோசனையை விடுதலைப்புலிகள் நிராகரித்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இதேவேளை அரசாங்கம் விரும்பினால் பேச்சுவார்த்தையை கிளிநொச்சியில் நடாத்தலாம் என விடுதலைப்புலிகள் தரப்பு தெரிவித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.**

சிறிலங்கா அரசாங்கத்திற்கும், விடுதலைப்புலிகளுக்குமிடையிலான நேரடிப்பேச்சுவார்த்தையை நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் நடாத்துவதற்கு அரசாங்கம் மறுப்புத் தெரிவித்திருந்தமை தெரிந்ததே. இதனைத்தொடர்ந்து விடுதலைப்புலிகள் தரப்பு தமது நிராகரிப்பைத் தெரிவித்துள்ளது.

இதேவேளை நேற்று வெளிநாடுகளில் பேச்சுவார்த்தைகள் நடாத்துவதில்லை என்ற தனது நிலைப்பாட்டினை அமைச்சரவை முடிவுகள் அறிவிக்கும்.என ஊடகவியலாளர் மாநாட்டில் அமைச்சரவைப் பேச்சாளர் நிமால்சிறிபால டிசில்வா தெரிவித்தார்.

போர் நிறுத்த உடன்பாடு நடைமுறையில் உள்ளபோதே போர் நிறுத்த மீறல்களும், போர் நிறுத்த உடன்பாட்டை வலுப்படுத்தும் நடவ

(ivஆம் பக்கம் பார்க்க)

## நாகர் கோவிலில் புலிகளின் நிலை முன்நோக்கி நகர்த்தப்படவில்லை

*-இராணுத்தின் குற்றச்சாட்டுக்கு கண்காணிப்புக்குழு பதில்*

யாழ்ப்பாணம் நாகர்கோவில் பகுதியில் உள்ள விடுதலைப் புலிகளின் காவலரண்கள் இராணுவத்தினரின் நிலைகளுக்கு அருகில் முன்னகர்த்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு நிராகரித்துள்ளது. நாகர்கோவில் பகுதியில் இராணுவத்தினரின் நிலைகளுக்கு அருகில்

(ivஆம் பக்கம் பார்க்க)

## உயர் நீதிமன்ற தீர்ப்பு இன்றுவந்ததும் வர்த்தமானி அறிவித்தலை வெளியிட முடிவு

(கொழும்பு)

சனாதிபதித்தேர்தல் தொடர்பான உயர்நீதிமன்றத் தீர்ப்பு இன்று வெளிவந்தவுடன் சனாதிபதித்தேர்தல் நடைபெறும் திகதியையும் அறிவிக்க தேர்தல் திணைக்களம் தயாராக உள்ளதாகத் தேர்தல் ஆணையாளர் தெரி வித்தார். இத்தீர்ப்பு வெளிவந்தவுடன் இது தொடர்பான வர்த்தமானி அறிவித் தலையும் வெளியிட அரச அச்சகக்கூட்டுத்தாபனத்தையும் தயாராக இருக்கும் வண்ணம் அச்சகக்கூட்டுத்தாபனத் தலைவருக்கு உத்தியோகபூர்வ அறி வித்தல் விடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## புளொட் உறுப்பினர் வவு.இல் சுட்டுக்கொலை

வவுனியாவில் புளொட் உறுப்பினரான இராஜரத்தினம் சிறீகாந்தன் (வயது-58) இனந் தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

வவுனியா கோவில்குளம் மூன்றாவது ஒழுங்கையில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நேற்றுமுன்தினம் புதன் கிழமை இரவு 10.30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக சிறிலங்காப் பொலிசார் தெரிவித்தனர்.

இராஜரத்தினம் சிறீகாந்தனின்

(ivஆம் பக்கம் பார்க்க)

## உயர்நீதிமன்றத்தின் இன்றைய தீர்ப்புக் குறித்து சனாதிபதி சந்திரிகா தீவிர ஆலோசனை

(கொழும்பு)

சனாதிபதித்தேர்தல் நடத்தப்படவேண்டிய ஆண்டு குறித்து உயர்நீதிமன்றம் இன்று தீர்ப்பளிக்கவுள்ள நிலையில், சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இது குறித்துத் தீவிரபரிசீலனையில் இருப்பதாகக் கொழும்பு அரச வட்டாரத்தகவல்கள் தெரிவிக்கின்றன. ஜாதிக ஹெல உறுமயவைச் சேர்ந்தவரான ஒமல்பே சோபித்ததேரர் சனாதிபதித்தேர்தல் இவ்வாண்டு நடத்தப்படவேண்டும் என உத்தரவிடக்கோரி தாக்கல் செய்துள்ள மனுவின் மீதான தீர்ப்பை உயர்நீதிமன்றம் இன்று வழங்கவுள்ளமை காரணமாகவே சனாதிபதி சந்திரிகாகுமாரதுங்க தீவிர ஆலோசனையில் ஈடுபட்டுள்ளார்.

தேர்தல் ஆணையாளர் தயானந்த திசாநாயக்க

(ivஆம் பக்கம் பார்க்க)

## சமாதானப்பேச்சை ஆரம்பிக்க சர்வதேச சமூகம் சிறி.அரசிற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்

**-கூட்டமைப்பினர் வெளிநாட்டு தூதுவர்களிடம் வலியுறுத்து**

யுத்த நிறுத்த உடன்படிக்கையை செம்மையாக நடைமுறைப்படுத்துவதற்கான பேச்சுக்களை நடத்தும் அதேவேளை சமாதானப் பேச்சுக்களையும் ஆரம்பிப்பதற்கு அனைத்துலக நாடுகள் சிறிலங்கா அரசிற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரித்தானிய தூதுவரிடமும் ஐரோப்பிய ஒன்றியத்தின் வதிவிடப் பிரதிநிதியிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

யுத்த நிறுத்த காலத்தில் அவசர காலச் சட்டம் பிறப்பிக்கப்பட்டமையினால் தமிழ் மக்கள் பெரும் அவலங்களை எதிர்கொண்டு

(ivஆம் பக்கம் பார்க்க)

# முக்கிய அறிவித்தல் – கரைச்சிப் பிரதேச சபை

கண்டாவளை உதவி அரசாங்க அதிபர் பிரதேசத்திற்குட்பட்ட பகுதிகளில் கட்டடத் தேவைகளுக்காக மணல் தேவைப்படுவோர் அல்லது அவற்றை விநியோகிக்கும் வாகன உரிமையாளர்கள் கல்லாறு மணல் சேகரிப்பு மையத்திலும், கல்மடுவிலுள்ள மூலிகைத் தோட்ட மணல் சேகரிப்பு மையத்திலும் மட்டும் மணலைக்கட்டணம் செலுத்திப்பெற்றுக்கொள்ள முடியும். இதற்கான கட்டணம் இன்றிலிருந்து ஒரு உழவு இயந்திர சுமைக்கு ரூபா 750/= ஆக இருக்கும்.

எனவே உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் கரைச்சிப்பிரதேச சபையின் அனுமதி பெறாமல் ஆறுகளிலிருந்தும் ஆற்றங்கரைகளிலிருந்தும் அகழ்ந்தேற்றி வீதியோரங்களிலும், வீடுகளிலும் குவிக்கப்பட்டுள்ள மணல் பிரதேச சபையின் உடைமையாக்கப்பட்டுள்ளது. அத்துடன் அனுமதியுடன் குவிக்கப்பட்ட மணலும் வியாபார நோக்கத்துடன் குவிக்கப்பட்டிருப்பின் சபையினால் கையகப்படுத்தப்படும்.

அத்துடன் இவ்விதிகளை மீறுவோர் மீது தண்டப்பணமாக ரூபா 5000/= அறவிடப்படுவதுடன் ஏற்றிச் செல்லும் வகனமும் தடுத்து வைக்கப்பட்டு சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

பொன்.நித்தியானந்தம்,
விசேட ஆணையாளர்,
கரைச்சிப்பிரதேச சபை,
கிளிநொச்சி.

(சி-12596)

# Immediate Vacancy

**Translator and research Assistant (female)**

Applications are requested from experienced women in the field of social sciences, research and translation

Solidar is consortium of organizations of 12 European countries that supports a broad range of portfolio of projects The Solidar net work in Sri Lanka comprises of three international NGO's- Arbeiter-samariter-Bund (ASB), Norwegian People's Aid (NPA),and Swiss Labour Assistance (SAH).

The position is based in Kilinochchi The selected candidate will assist an anthropologist in her research on the conditions of women and related gender issues

**Other duties will include-**

- Taking down minutes of the meetings with women groups and personal interviews.
- Maintain contact with women organizations.

**Required qualifications:**

- Experience in Social researches
- Computer skills
- Should be fluent in English,and Tamil (Knowledge of Italian or French would be an added advantage)

**Period of Contract:**

One Month

Extension will be considered based on the performance and the requirement at the time.

Cover letter and curriculam vitae should be addressed to:

Ms.Christiana Natali, Solider,No. 156, Jaffna Road Paranthan (Tel: 021-228 5070/5107)

Deadline for application is 29th August 2005.

(சி/12591)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## வெளிவாரிப்பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு

# வெளிவாரிப் பரீட்சைகள்

1. கலைமாணி பகுதி — 11—2002
2. நுண்கலைமாணி (சங்கீதம்)—2001
[1ஆம், 2ஆம், 3ஆம், மற்றும் 4ஆம் வருட பரீட்சைகள்]
3. நுண்கலைமாணி (பரத நாட்டியம்)—2001
[1ஆம், 2ஆம், 3ஆம், மற்றும் 4ஆம் வருட பரீட்சைகள்]

மேற்படி பரீட்சைகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மிகவிரைவில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இப்பரீட்சைக்குத் தோற்றவிரும்பும் பரீட்சார்த்திகள் யாழ். பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில் ரூபா 100/= செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டினை வெளிவாரிப்பட்டப்பதிவுகள் பரீட்சைகள் அலகில் சமர்ப்பித்து உரிய விண்ணப்பப்படிவத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.

பரீட்சை நடைபெறும் திகதி மற்றும் விபரங்கள் பின்னர் பத்திரிகைகள விளம்பரப்படுத்தப்படும்.

தபால் மூலம் விண்ணப்பப்படிவத்தைப் பெற விரும்புவோர் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயருக்கு எழுதப்பட்ட ரூபா 100/= விற்கான காசுக்கட்டளை/ தபாற் கட்டளையுடன் சுய முகவரியிடப்பட்ட ரூபா 16.50 பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 20X20 செ.மீ அளவுடைய தபால் உறையுடன் உதவிப்பதிவாளர், வெளிவாரிப்பரீட்சைகள் அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

பரீட்சார்த்திகளிடமிருந்து பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 30. 09. 2005 ஆகும். அதன் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

**குறிப்பு:- புதிய பரீட்சைக்கட்டண விபரம்**

முதல் முறை பரீட்சைக்கு தோற்றுபவர்களுக்கான கட்டணம் ரூபா 1600/= மீள்பரீட்சார்த்திகளாயின் ஒவ்வொரு பாட அலகிற்கும் செலுத்தவேண்டிய கட்டணம் ரூபா 200/=

மேலதிக விபரங்களுக்கு 021–2223612 என்ற தொலை பேசி எண்ணுடன் தொடர்புகொள்ளலாம்.

பதிவாளர்.
25.08.2005

(சி-12595)

## வரிவிளம்பரம்

**காணி**

**விற்பனைக்குண்டு**

கிளிநொச்சி-கனகபுரம் 10ஆம் பண்ணையில் உள்ள இரண்டு ஏக்கர் காணி விற்பனைக்குள்ளது. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:- எஸ். குகன் இல-104, 10 ஆம் பண்ணை. கனகபுரம். (6664)

## பொத்தகசாலைக்கு ஆள் தேவை

வன்னிப்பகுதியில் உள்ள அறிவமுது பொத்தகசாலைக்கு ஆண்கள் தேவை. கல்வித் தகைமையுடன் கிளிநொச்சி அறிவமுதுக்கு வரவும் உணவு, தங்கு மிடவசதி உண்டு.
(6663)

# சாவு அறிவித்தல்


## மாயழகர் மாயாண்டி

யூனியன்குளம் இல.21 ஐ நிரந்தர வதிவிடமாகக்கொண்ட திரு. மாயழகர் மாயாண்டி அவர்கள் 25.08.2005 (நேற்று) வியாழக்கிழமை காலை சாவடைந்துள்ளார். இவர் காலஞ்சென்ற மாயழகர் கண்ணம்மா அவர்களின் அன்புப்புதல்வனும், காலஞ்சென்ற அடைக்கலமேரியின் அன்புக்கணவரும், திரு.உதயகுமார் (தலைவர், திருவள்ளுவர் கமக்கார அமைப்பு கோணாவில்),உதயபாலன், மாவீரர் லெப்கேணல் சேகர் (சாள்ஸ்அன்ரனி சிறப்புப்படையணி சிறப்புத்தளபதி), உதயநந்தினி, சாந்தக்குமார்அவர்களின் அன்புத்தந்தையும், திரு. முத்துலிங்கம் (பாலு), றீற்றா, வளர்மதி அவர்களின் அன்பு மாமனாரும், சரணி, கோகுலப்பிரியன், யானுஜா, கிசோப்பிரியன், டுகித்ரா, கிளக்ஸன், சகானா, தனுசன், விதுஷா, ஜனனி, பிரியந்தி, பிரியங்கா, மீரா ஆகியோரின் அன்புப்பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 26.08.2005 இன்று மாலை 3.00 மணியளவில் அன்னாரது இல்லமான இல.21 யூனியன் குளத்தில் நடைபெற்று பூதவுடல் யூனியன்குளம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், தளபதிகள், போராளிகள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:-
மகன்
மா.உதயகுமார்.

(6669)

# சாவு அறிவித்தல்



## பாக்கியநாதன் விஜியானந்

| அன்னையின் மடியில் | பூமித்தாயின் மடியில் |
|---|---|
| 1978.05.09 | 2005.08.24 |

ஆனந்தநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பாக்கியநாதன் விஜியானந் நேற்று முன்தினம் காலமானார். அன்னார் காலஞ்சென்ற பாக்கியநாதன், இராஜேஸ்வரி ஆகியோரின் அன்பு மகனும் சத்தியப்பிரியா ஸ்ரீகாந், சத்தியவாணி, லோகதர்சன் ஆகியோரின் அன்புச்சகோதரனும், வாகனசாரதியான (கலைச்சந்திரன்) சத்தியசீலனின் அன்பு மைத்துனரும் தர்மரட்ணத்தின் பெறாமகனும் யூட்,லதன், தம்பி தாஸ் ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரனும், கிளி.மத்தியகல்லூரியின் பழைய மாணவனுமாவார். இவ்வறிவித்தலை உற்றார்,உறவினர், அன்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிக்கொள்கின்றோம்.

ஆனந்தநகர்,
இல.111,
கிளிநொச்சி.
(6671)

தகவல்:
குடும்பத்தினர்
சத்தியசீலன்.

# ஜேர்மனியிலிருந்து 50 இலங்கையர் நேற்று திருப்பி அனுப்பப்பட்டனர்

**ஜேர்மனியில் சட்டவிரோதமாக தங்கியிருந்த இலங்கையர்கள் 50பேர் இலங்கைக்கு திருப்பி அனுப்பிவைக்கப்பட்டனர்.அந்த நாட்டின் குடிவரவு, குடியகல்வுத்திணைக்களம் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.**

ஜேர்மனியிலிருந்து விசேட விமானம் மூலம் நேற்று வியாழக்கிழமை காலை கட்டுநாயக்க விமான நிலையத்தை இக்குழுவினர் வந்தடைந்ததாக விமானநிலைய பாதுகாப்புப்பிரிவினர் தெரிவித்தனர்.

நாடுதிரும்பிய 50 பேரில் யுவதிகளும் குழந்தைகளும் இருந்தனர். இவர்கள் நாடு திரும்பியதும் விமானநிலைய குற்றத்தடுப்புத்திணைக்கள அதிகாரிகள் அவர்களை அழைத்துச்சென்று விசாரணைகளை நடத்திவாக்கு மூலங்களைப் பதிவுசெய்த் பின்னர் விடுவித்துள்ளனர்.

இலங்கை திரும்பியவர்களுடன் ஜேர்மன் காவல்துறை அதிகாரிகள் 50 பேரும், வைத்தியர்கள் சிலரும் வந்திருந்ததாக விமான நிலைய பாதுகாப்புப்பிரிவினர் கூறினர்.

# எஸ்.பி யின் பாராளுமன்ற உறுப்புரிமை குறித்த மனு மற்றொரு நீதிபதிகள் குழுவிடம்

ஐ.தே.கட்சி பாராளுமன்ற உறுப்பினரான எஸ்.பி. திசாநாயக்கவின் பாராளுமன்ற உறுப்புரிமை தொடர்பாக அவரால் சமர்ப்பிக்கப்பட்ட மேன்முறையீட்டை விசாரணை செய்த மூன்று பேர் அடங்கிய நீதிபதிகள் குழு அதனை விசாரிப்பதில் இணக்கப்பட்டிற்கு வர முடியாத நிலையில் வேறொரு விசாரணைக்குழுவிடம் அதனை ஒப்படைக்கத் தீர்மானித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உயர்நீதிமன்ற நீதிபதிகளான செல்வி ஷிராணி பண்டாரநாயக்க (தலைவர்), நிமால் திசாநாயக்க நிமால் காமினி ஆகியோரடங்கிய நீதிபதிகள் குழுவினர் நேற்று முன்தினம் இந்த முறையீட்டைப் பரிசீலனை செய்து விசாரணைக்கு எடுத்துக்கொண்டவேளை இரு நீதிபதிகள் இணைக்கப்பாட்டுக்கு வந்து மூன்றாமவர் அதனை விசாரணைக்கு எடுக்க மறுத்ததையடுத்து மேற்படி மனு வேறொரு நீதிபதிகள் குழுவிடம் ஒப்படைக்கத் தீமானிக்கப்பட்டது.

தற்போது சிறையிலிருக்கும் எஸ். பி. திசநாயக்க தனது பாராளுமன்ற உறுப்புரிமை நீக்கப்பட்டமை தொடர்பாக மேன் முறையீட்டு நீதிமன்றில் மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. பிரதிவாதிகளாக பாராளுமன்ற செயலர் பிரியாணி விஜேசேகர, தேர்தல் ஆணையாளர் நுவரேலியா தெரிவத்தாட்சி அதிகாரி குறிப்பிடப்பட்டுள்ளனர்.

# அவுஸ். பிரதமரின் கருத்திற்கு பாராளுமன்றில் நேற்று விவாதம்

(கொழும்பு)

சிறிலங்காவில் சனாதிபதித்தேர்தல் நடைபெறும் காலம் தொடர்பாக அவுஸ்திரேலியப் பிரதமர் ஜோன்ஹவாட் தெரிவித்த கருத்துக்கள் தொடர்பில் நேற்றுப் பாராளுமன்றில் ஒத்திவைப்பு விவாதம் ஒன்று நடைபெற்றுள்ளது. இந்தக் கருத்தானது சிறிலங்கா உள்விவகாரங்களில் தலையிடுவதாக பிரேரணையை முன்வைத்த பிரதி அமைச்சர் சிறீபதி சூரியாராட்சி தெரிவித்தார். இவ் வேளையில் குறுக்கிட்ட பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜெயசேகர இது தொடர்பில் பிரதி அமைச்சர்களின் கூட்டமைப்பு எதிலும் அறிக்கை வெளியிட்டு உள்ளதா என வினவினார். அதற்கு தமக்கும் பிரதி அமைச்சர்கள் கூட்ட மைப்பிற்கும் எதுவித தொடர்பு மில் லை எனப் பிரதி அமைச்சர் சிறீ பதி சூரியாராட்சி பதில் அளித்தார். (32)

# வற்வரி நீக்கினாலும் பால்மா விலையை உடனடியாகக் குறைக்க முடியாது

## - வர்த்தகர்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

பால்மாவின் வற்வரி நீக்கினாலும் பால்மாவின் விலையைக் குறைக்க முடியாததென கொழும்பு வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

ஏற்கனவே கொள்வனவு செய்யப்பட்ட பால்மாவின் வற்வரியை மீள வழங்குமாறு நீதியமைச்சரிடம் வேண்டுகோள் விடுத்ததை இவ் வேண்டுகோள்அமுல்படுத்த முடியாததென நிதியமைச்சர் அறிவித்துள்ளதோடு தற்பொழுது விற்பனை நிலையங் களில் இருக்கும் பால்மா விற்பனை முடியும் வரை வற்வரியை நீக்குவதில்லை என அரசு அறிவித்துள்ளது.

பால்மாவின் வற்வரி நீக்குவது தொடர்பாக பால்மா வர்த்தகர்களுடன் பிரதியமைச்சர் நேற்று முன்தினம் மேற்கொண்ட கலந்துரையாடலின் போதே வர்த்தகர்களினால் இவ் வேண்டு கோள் விடுக்கப்பட்டது.

# மணற்காடு மீனவர்கள் இருவரையும் விடுவிக்கத் திருமலை நீதவான் பணிப்பு

(திருகோணமலை)

வடபகுதிக்கடலில் மீன்பிடிக்கச்சென்றபோது முதலில் காணாமற் போனதாக அறிவிக்கப்பட்டு பின்னர் கடற்படையினரால் தடுத்து வைக்கப்பட்டதாகத் தெரிவிக் கப்பட்ட வடமராட்சி, மணற்காடு பகுதியைச்சேர்ந்த மிக்கேல்பிள்ளை றெஜியன், சத்தியசீலன் ஆகிய இரு மீனவர்களும் நேற்று வியாழக்கிழமை காலை திருகோணமலை நீதவான் நீதிமன்றத்தில் துறைமுகப் பொலிசாரால் ஆஜர் செய்யப் பட்டனர்.இருவரையும் அவர்களின் உறவினர்கள் வடமராட்சியிலிருந்து வந்து பொறுப்பு ஏற்பதற்காக செப்ரெம்பர் முதலாம் திகதி வரை திருகோணமலை சிறைச்சாலையில் பாதுகாப்பாக வைத்திருக்கும்படி திருகோணமலை நீதவான் உத்தர விட்டார்.

யாழ்.போர்நிறுத்தக்கண்காணிப்புக் குழுவினரிடமிருந்து கிடைத்த தகவலையடுத்து, திருகோணமலை போர்நிறுத்தக்கண்காணிப்புக்குழுவின் தலைவர் ஆர்தர் ருவிட்டன் திருகோணமலையில் கடற்படை அதிகாரிகளுடன் கடற்படையினரால் தடுத்துவைக்கப்பட்ட இரு மீனவர்களின் விடுதலை பற்றி பேச்சுவார்த்தை நடத்தினர். அதனையடுத்து திருகோணமலை கடற்படையினர் இரு மீனர்வர்களையும் திருகோணமலை துறைமுகப்பொலிசாரிடம் ஒப்படைத்தனர். திருகோணமலை துறைமுகப் பொலிசார் இருவரையும் நேற்று வியாழன் திருமலை நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர். கண்காணிப்புக் குழுவினருக்கு கடற்படையினர் சமர்ப்பித்த அறிக்கையின் படி இரு மீனவர்களும் வடபகுதிக் கரையிலிருந்து சுமார் ஐம்பது மைல்களுக்கு அப்பால் நடுக்கடலில் படகொன்றில் தத்தளித்துக் கொண்டிருந்தபோது அங்கிருந்து திருமலைநோக்கி வந்த கடற்படைப்படகு ஒன்றில் அவர்கள் ஏற்றப்பட்டு திருகோணமலைக்குக் கொண்டுவரப்பட்டதாகத் தெரிவிக் கப்பட்டிருந்தது.

இதேவேளை, திருகோணமலை போர்நிறுத்தக்கண்காணிப்புக்குழுவினர், வடமராட்சி கூட்டுறவுச்சங்க நிர்வாகம் மற்றும் மீனர்வர்களின் உறவினர்களுக்கு அனுப்பிய தகவல்களில் தேவையான ஆவணங்களுடன் திருகோணமலைக்கு வந்து இரு மீனவர்களையும் அழைத்துச்செல்லும்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. (25)

# சமாதான செயலக அதிகாரிகள் யாழ். குடா நாட்டிற்கு விஜயம்

## –முன்னணி இராணுவ நிலைகளையும் பார்வையிட்டனர்.

சிறிலங்கா சமாதானச் செயலகத்தைச்சேர்ந்த உயர்அதிகாரிகள் குழு ஒன்று நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்துள்ளது. பிற்பகல் சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான விசேட உலங்குவானூர்தி மூலம் யாழ்ப்பாணம் பொது விளையாட்டு மைதானத்தில் இக்குழுவினர் வந்திறங்கினர்.

பலத்த இராணுவப் பாதுகாப்புகளுடன் யாழ்ப்பாணத்திற்கு வந்த இக்குழுவில் சிறிலங்கா சமாதான செயலக சட்ட வரைவுப் பணிப்பாளர் லக்ஷ்மன் அமரசிங்க மற்றும் பிரதிச்சட்ட வரைவுப்பணிப் பாளர் நிறோஜா நிர்மலசூரிய ஆகியோர் அடங்குவர்.

இவர்கள் இலங்கை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் யாழ்.மாவட்ட அதிகாரிகள் மற்றும் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஸ் ஆகியோரைத் தனித்தனியே அவரவர் அலுவலகங்களில் சந்தித்து கலந்துரையாடினர். இதன்போது அவசரகாலச்சட்டம் அமுலில் இருக்கும் தற்கால சூழ்நிலையில் யாழ்.குடாநாட்டில் அடிக்கடி ஏற்படும் பதற்றமான சூழ்நிலைகள் சமாதானச் சூழலில் ஏற்படுத்தியிருக்கும் தாக்கங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது. அத்துடன் மாலை 6.30 மணியளவில் முகமாலை மற்றும் நாகர்கோயில் ஆகிய இடங்களில் உள்ள இராணுவ முன்னரங்க நிலை களுக்குச் சென்று அங்கு படை அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தியதுடன் இராணுவத்தினரின் பலப்படுத்தல் நடவடிக்கைகள் குறித்து நேரில் பார்வையிட்டனர். (33)

# உரிமைக்குரல் கொடுக்க அனைவரும் அணி திரள்வோம்

## -அக்கராயன் பொது அமைப்புக்கள் அறைகூவல்

(கிளிநொச்சி)

தென்னிலங்கையில் இன்று பயங்கரமான சிங்கள,பௌத்த பேரினவாதம் தலைவிரித்தாடுகிறது.இது தமிழ்மக்களின் சனநாயக வழியிலான எந்தவொரு தீர்வுக்குமான கதவுகளையும் முற்றாக மூடியுள்ளது. இந்நிலையில் தமிழர் தாயகத்தில் வாழுகின்ற தமிழ் பேசும் மக்களாகிய நாம் இன்று எதிர்நோக்கும் அவலமானதும் ஆபத்தானதுமான நிலையைச் சர்வதேசத்தின் முன் வெளிப்படுத்தி எமக்கான நியாயத்தையும் அங்கீகாரத்தையும் கோருவதற்கான தமிழ்தேசியத்தின் பிரகடன நிகழ்வில் உரிமைக்குரல் எழுப்ப அனைவரும் அணி திரள்வோம் என அக்கராயன் பிரதேசபொதுஅமைப்புக்கள் அறைகூவல் விடுத்துள்ளன.

இது குறித்து அவை வெளியிட்டுள்ள அறிக்கையில்;

எமது தாயக நிலத்தை ஆக்கிரமித்து நிற்கும் இராணுவம் உடனடியாக வெளியேற வேண்டும்மென்றும் எமது தலை விதியை நாமே நிர்ணயித்துக் கொள்ளும் சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்றும் மரபுவழித் தாயகம், தேசிய இனம், தன்னாட்சி என்ற அடிப்படையில் எம்மையும் எமது போராட்டத்தையும் அங்கீகரிக்க வேண்டுமெனவும் சர்வதேச சமூகத்தைக் கோருவதற்காக 01-09-2005 இல் கிளிநொச்சி பொதுவிளையாட்டு மைதானத்தில் மாலை 3.00 மணிக்கு நடைபெறும் தமிழ் தேசிய எழுச்சிப் பிரகடனத்தில் அனைவரும் கிளர்ந்தெழுந்து எமது உரிமைக்குரலைச் சர்வதேசத்திற்கு வெளிப்படுத்துவோம் எனக் கேட்கப்பட்டுள்ளது. (சோ)

# சிறுவர் பூங்கா பணியாளருக்கு இருநாள் பயிற்சிக் கருத்தமர்வு

தமிழர் புனர்வாழ்வுக்கழக அனுசரணையுடன் தமிழீழஊரக வளர்ச்சிப்பணி நிர்வகிக்கும் சிறுவர் பூங்காக்களின் பணியாளர்களுக்கான இரண்டுநாள் பயிற்சிக் கருத்தமர்வு கிளிநொச்சி, அம்பாள்குளம், குமா சிறுவர் பூங்காவில் இன்றும், நாளையும் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வின் ஆரம்ப வைபவம் இன்று காலை 9.30 மணிக்கு இடம்பெறுகின்றது. இக்கருத்தமர்வில் சிறுவர்களின் உடல் ,உள மேம்பாடு, கல்வி, கலை விருத்தி மற்றும் முகா மைத்துவப் பணிகள் தொடர்பாக துறைசார்ந்தோர் கருத்துரைகளை வழங்குவார்.

ஊரகவளர்ச்சிப்பணியினர் 600 சிறார்களை பகல்வேளையில் பராமரிக்கும் நான்கு சிறுவர் பூங்காக்களை துணுக்காய், முழங்காவில், விசுவமடு, அம்பாள்குளம் ஆகிய பகுதிகளில் நிர்வகித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## பெற்றுக்கொள்ளவும்

செல்வராணி முருகேசு 154ஆம் கட்டை, செல்வபுரம், திருமுறிகண்டி. என்பவரது 696194190V இலக்கமுடைய தேசியஅடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் வந்து பெற்றுக்கொள்ளவும்.

# விழிப்புணர்வுச் செயற்பாடுகளில் பாடசாலைச் சமூகம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சியில் செப்ரெம்பர் முதலாம் திகதியன்று நடைபெறவுள்ள தமிழ்தேசிய எழுச்சிப் பிரகடனத்தினை முன்னிட்டு கிளிநொச்சி மாவட்டத்தில் பிரதேச ரீதியாகவும், கிராம ரீதியாகவும் விழிப்புணர்வு எழுச்சிச் செயற்பாடுகள் இடம்பெற்றுவருவதனைக் காணக்கூடியதாகவுள்ளது.

நேற்றைய தினம் கிளிநொச்சிப் பிரதேச பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலைகள் ரீதியாகச் சென்று தமிழ்தேசிய எழுச்சிப்பிரகடன மாநாட்டினையொட்டி தமிழ்தேசிய விழிப்புணர்வு செயற்பாட்டுப் பரப்புரை மேற்கொள்ளப்பட்டதுடன் பூநகரி மகாவித்தியாலயத்திலும் மேற்படி விழிப்புணர்வு செயற்பாட்டுக் கலந்துரையாடல்களும் நடைபெற்றன.

மற்றும் கிளிநொச்சி மத்திய கல்லூரி, கிளிநொச்சி மகாவித்தியாலய உயர்தரவகுப்பு மாணவ, மாணவிகள் இணைந்து கிளிநொச்சி நகரில் உள்ள பேருந்துநிலையம், பொதுச்சந்தை, கிளிநகர வர்த்தக நிலையங்கள் யாவற்றிற்கும் நேரடியாகச்சென்று தமிழ்தேசிய எழுச்சிவாரக்கொடியினை சகலருக்கும் விநியோகித்ததுடன் தமிழ்தேசிய எழுச்சிப்பிரகடனம் குறித்த விதப்புரைகளையும் வழங்கியமை குறிப்பிடத்தக்கது. மற்றும் கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்றுப் பொதுமக்கள் முதல் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் அரச அரசசார்பற்ற நிறுவன ஊழியர்கள் அனைவரும் தமிழ்தேசிய வாரக் கொடியினை அணிந்தவண்ணம் தங்கள் தங்கள் கடமைகளை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# அரசின் அவசரகாலச்சட்ட அமுலாக்கம் கூட மக்களின் இயல்பு வாழ்வை பாதிக்கக் கூடும்

## வவுனியா மாவட்ட நீதிபதி அபிப்பிராயம்

(செட்டிகுளம்)

வவுனியா பிரதேச மக்களை அச்சத்திற்கும் பீதிக்கும் உள்ளாக்கியிருக்கும் தொடர் கொலைகளும், தொடர் குண்டுத்தாக்குதல்களும் மக்களின் இயல்பு வாழ்க்கையைப் பெரிதும் பாதிப்பதாக அமைந்திருக்கின்றன. நாட்டில் அவசரகாலச் சட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளமையும் கூட இதற்கு மேலும் உதவுவதாக அமைந்துவிடக்கூடும்.

நேற்றுமுன்தினம் இரவு கோவில்குளத்தில் இடம்பெற்ற இனந்தெரியாதவர்களின் துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணையின் போது வவுனியா மாவட்ட நீதிபதி எம். இளஞ்செழியன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் தொடர்கின்ற அடையாளம் தெரியாதவர்களின் கொலைகளும், குண்டுத் தாக்குதல்களும் மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளன. இந்தச் சம்பவங்கள் தொடர்பான சட்டத்துறை புலன் விசாரணைகளில் முன்னேற்றம் இல்லை. இந்தச் சம்பவங்களை நேரில் காண்பவர்கள் கூட சாட்சியமளிப்பதற்கு முன்வரத் தயங்குகிறார்கள். அவர்கள் பாதுகாப்பற்ற சூழ்நிலையில் இருக்கிறார்கள்.

சிறிலங்கா அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் போர்நிறுத்த ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டதன் பின்னர் இதுவரையில் இனந்தெரியாதவர்களினால் 21 கொலைகள் இடம்பெற்றுள்ளன. இந்த வாரத்தில் மாத்திரம் மூன்று கொலைகள் நடந்துள்ளன. இத்தகைய நீதிவிசாரணையற்ற கொலைச் சம்பவங்கள் சர்வதேச குற்றங்களாகப் பிரகடனப்படுத்தப் பட்டுள்ளன.

போர்நிறுத்த ஒப்பந்தத்தின் பின்னர் இடம் பெற்றுள்ள 21 கொலைகளிலும் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்களே கொல்லப்பட்டிருக்கின்றார்கள். இத்தகைய கொலைச் சம்பவங்களும் குண்டுத்தாக்குதல்களும் தொடர்வதன் மூலம், அமைதிப் பூங்காவாக இருந்த வவுனியா மாவட்டம் இப்போது களமுனைக் களமாக மாறிவருகின்றது எனவும் தெரிவித்தார். (21)

# பண்டாரவன்னியனின் 202ஆவது ஆண்டு வெற்றி விழா

ஆங்கிலேயப்படையின் முல்லைத்தீவு கோட்டையை 1803ஆம் ஆண்டு ஆவணி மாதம் 25ஆம் திகதி அழித்து வெற்றிபெற்ற 202ஆவது ஆண்டு விழா நேற்று நடைபெற்றது.

மாலை 5.00 மணியளவில் பண்டாரவன்னியனின் கற்பொறிப்பு வளாகத்திலிருந்து தமிழரின் பாரம்பரிய கலைகளான காவடி, கரகம், கும்மி,கோலாட்டம், குதிரையாட்டம், குடமூதல் ஆகிய நிகழ்வுகள் நடைபெற்றன. ஊர்வலம் பண்டாரவன்னியனின் சிலை அமைந்துள்ள வளாகத்தை வந்தடைந்தது. அங்கு மாலை ஆறு மணியளவில் அறங்காவல் கழகச் செயலாளர் சி.வேதவனம் தலைமையில் பொதுச்சுடரினை தமிழீழ மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி





ஏற்ற, தேசியக்கொடியினை முல்லை.மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் முகுந்தன் ஏற்றி வைத்தார். தொடர்ந்து பண்டாரவன்னியன் வாள் கொடியினை வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப பினர் கனகரத்தினம் ஏற்றினார். முல்லை.அரசாங்க அதிபரின் உரையினைத்தொடர்ந்து திருகோணமலை மாவட்டஅரசியல்துறைப்பொறுப்பாளர் எழிலன், தமிழீழ மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி, யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செகஜேந்திரன், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர். இதில் பண்டாரவன்னியன தொடர்பான கலைநிகழ்வுகள் நடைபெற்றதுடன் பண்டாரவன்னியன் தொடர்பாக ஓவியம், கவிதை, கட்டுரைப் போட்டிகளில் கலந்துவெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன. (தீ,05)

# ரணிலின் உயிருக்கு ஆபத்து ஏற்படின் அரசே பொறுப்பேற்க வேண்டும்

-ஐ.தே.கட்சி பா. உறுப்பினர் தயாசிறி ஜயசேகர

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டால் அதற்கான முழுப் பொறுப்பையும் அரசாங்கமே ஏற்க வேண்டும் என ஐக்கியதேசியக் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

அந்தக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர கருத்துத் தெரிவிக்கையில்; இப்போது எதிர்க் கட்சித் தலைவரின் பாதுகாப்புக்காக உபயோகப்பட்டு இருந்த 50 பேர் பயனளிக்கக் கூடிய வாகனம் அதிகாரிகளினால் மீண்டும் பெற்றுக்கொள்ளப்பட்டு இருக்கிறது. இதற்காக தனிப்பட்ட வாகனம் ஒன்றை உபயோகிக்குமாறு பாதுகாப்புத்துறை அதிகாரிகளினால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. மறுபக்கத்தில் பிரதமரின் பாதுகாப்பு அதி கரிக்கப்பட்டுள்ளது. எமக்குள்ள பிரச்சினை என்னவென்றால் அச்சுறுத்தல் நிறைந்த இந்தக்காலக்கட்டத்தில் எமது தலைவருக்கு ஏதாவது ஆபத்து நிகழ்ந்தால் அதற்கான முழுப்பொறுப்பையும் அரசு ஏற்கவேண்டும் என்றார். (32)

## பிற்போடப்பட்டது

இன்றும்,நாளையும், நாளைமறுதினமும் யுனிசெப் அனுசரணையுடன் நடைபெறவுள்ள சேவைக்காலச் செயலமர்வு தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது. மீள நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

## பற்சிகிச்சை

எதிர்வரும் 29ஆம் திகதி திங்கள் காலை எட்டு மணிக்கு பற்சிகிச்சை நடைபெற உள்ளதால் பயன்பெற விரும்புவோர் தியாகதீபம் திலீபன் மருத்துவசேவை நயினாமடுவில் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

# விடுதலைப்புலிகள் ஏடு இன்று வெளிவருகிறது

தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடான விடுதலைப்புலிகள் பத்திரிகையின் ஆடி-ஆவணி மாதத்திற்குரிய 125 ஆவது குரல், 'அவசர காலச்சட்டம் பிரகடனம் தமிழர் தாயகத்தில் பதற்றம்?' என்ற முகப்புச் செய்தியுடன் இன்று வெளிவருகின்றது.

'சிங்கள அரசின் பிண அரசியல்' எனச்சொல்லும் ஆசிரிய தலையங்கத்துடன் வரும் இவ்வேடு,க.வே. பாலகுமாரன் எழுதிய "இன்னொரு ஏய்ப்பர்வருகிறார்" என்ற அரசியல் கட்டுரையும், 'சிங்கள அரசிடமிருந்து அரசியல்தீர்வு கல்லில்நார் உரிக்கும் முயற்சி, 'சுனாமி நிவாரணப்பணி பொதுக் கட்டமைப்பிற்கு வெளியே' போன்ற அரசியல் கட்டுரைகளுடன், காலநிதி க.சோமாஸ்கந்தன் எழுதிய 'வவுனியாத் தீர்மானமும் அதுபோன்ற பிற நிகழ்ச்சிகளும்' என்ற கட்டுரையையும் தாங்கி வருகின்றது.

மற்றும், தமிழீழ மண்ணில் சூழல் நல்லாசிக்கெனவோர் ஆணையம்' என்ற கட்டுரையுடன் 'இலங்கை இனபபிரச்சினையின் போக்கும் இலங்கை நீதிமன்றங்களின் நோக்கும்', 'துணை இராணுவப்படைகள் கேள்விக் குறியாக்கப்படும் சமாதானம்', போன்ற கட்டுரைகளுடன், விடுதலைப்புலிகள் மகளிர் படையணிகளின் இருபதாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வெளிவரும் 'வரலாற்றை வரையும் தூரி கைகள்', என்ற கட்டுரையுடன் உலைக்களம், விழுதுகள், போராளிகளின் படைப்புக்களையும் வழமையான அச்சங்களையும் தாங்கி இவ்வேடு வெளிவருகின்றது.

# சேருநுவரவில்— தமிழ்இளைஞர் கைது

திருகோணமலை மாவட்டம் சேருநுவரப் பகுதியில் உந்துருளியில் சென்றுகொண்டிருந்த கிளிவெட்டியைச் சேர்ந்த கோபாலபிள்ளை சதாதரன் சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டார். திருமலை சேருநுவரப் பகுதியிலுள்ள சிறிலங்காப் பொலிஸ் நிலையத்தில் இவர் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

சேருநுவர பகுதியில் உள்ள சிறிலங்கா சோதனைச் சாவடிக்கு அருகில் நேற்றுமுன்தினம் மாலை 5.35 மணியளவில் அவர் சந்தேகத்திற்கு இடமான முறையில் நடமாடியதாகக் கூறி சிறிலங்காப் படையினர் கைது செய்தனர்.

# கதிர்காமர் கொலை குறித்து மேலும் 20 பேர் கைது

(கொழும்பு)

முன்னாள் வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் கொலை தொடர்பில் மேலும் 20 பேர் கைதாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கொலை தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளும் விசேட இரகசிய குற்றப்புலனாய்வுத் துறையினர் மின்சார உபகரணங்களை இறக்குமதி செய்யும் நிறுவனம் ஒன்றின் களஞ்சிய சாலையில் பணிபுரிபவர்களையே கைது செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. பம்பலப்பிட்டியில் உள்ள நிறுவனம் ஒன்றில் பணிபுரியும் இவர்களில் மூவினத்தையும் சேர்ந்தவர்கள் இருப்பதாகவும் இந்தியர் ஒருவருக்கு இந்த நிறுவனம் சொந்தமானது எனவும் தெரிவிக்கப்படுகிறது. இந்த நிறுவனம் இறக்குமதி செய்யும் மின்விசிறிகள் அடைக்கப்பட்டுவரும் பெட்டிகளிலேயே கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்கள் மறைத்துக் கொண்டு செல்லப் பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (32)

## புளெட்...

இல்லத்திற்குள் நுழைந்த துப்பாக்கிதாரி யன்னல்வழியே கைத்துப்பாக்கி மூலம் இந்தத் தாக்குதலை நடத்தியதாகவும் கூறப்படுகிறது.

இது குறித்து வவுனியா சிறிலங்காப் பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். கொல்லப்பட்ட புளெட் கும்பலைச் சேர்ந்த இந்த நபர் இராணுவப் புலனாய்வுப் பிரிவினருடன் நெருங்கிச் செயற்பட்டதாகத் தெரிவிக்கப் படுகிறது.

## பேச்சுவார்த்தை

டிக்கைகளும் இடம்பெற்று வந்தன.

இந்த நிலையில் தமிழீழ விடுதலைப்புலிகள் போர் நிறுத்த உடன்பாட்டை உரிய முறையில் பின்பற்ற வேண்டும் என்பதை வலியுறுத்தி ஐக்கிய நாடுகள் அமைப்பிடம் இலங்கை அரசாங்கம் கோரியுள்ளதாகவும் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா குறிப்பிட்டார்.

# ஊடகவியலாளர் களத்தை உருவாக்க வலியுறுத்தி யாழ்.இல் போராட்டம்

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் டென்மார்க் நிதிஉதவியுடனான ஊடக வள பயிற்சி நிறுவனத்திற்கு எதிராக யாழ். ஊடகவியலாளர்கள் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

ஊடகவியலாளர் களத்தை உருவாக்கவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து வடக்கு இலஙகை ஊடகவியலாளர்கள் சங்கத்தின் சார்பில் இந்தப்போராட்டம் நடத்தப்பட்டது.

தாங்கள் வலியுறுத்தும் பத்திரிகையாளர் களத்தை யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் ஐந்து பிரதான தமிழ் ஊடகங்களின் ஆசிரியர்களின் ஆலோசனைக்கமைய உருவாக்க வேண்டும் என்று ஊடகவியலாளர்கள் வலியுறுத்தினர்.

ஊடகவியலாளர் கோரிக்கையை ஏற்று பத்திரிகையாளர் களம் அமைக்கப்படும் என்று பயிற்சி நிறுவனம் சார்பில் உறுதியளிக்கப்பட்டதையடுத்துப் போராட்டம் கைவிடப்பட்டது.

## சமாதானப்...

வருவதாகவும் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள சுட்டிக்காட்டியுள்ளனர்.

பிரித்தானிய தூதரகத்தில் நேற்று முன்தினம் முற்பகல் 10.30 மணி முதல் 11.30 மணிவரை இடம்பெற்ற சந்திப்பில் கொழும்பிலுள்ள பிரித்தானிய தூதுவர் ஸ்ரீபன் இவான்ஸ், ஐரோப்பிய ஒன்றியத்தின் வதிவிடப் பிரதிநிதி வோல்டர் வில்ரன் ஆகியோருடன் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், ஜோசப் பரராஜசிங்கம், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் தற்போதைய அரசியல் நிலை தொடர்பாகக் கலந்துரையாடினர்.

இச்சந்திப்பின்போது கூட்டமைப்பினர் மேலும் தெரிவித்ததாவது:

யுத்த நிறுத்தம் வந்தபின் அது தொடர்பாக எந்தவித முன்னேற்றமும் காணப்படவில்லை. அதற்கு அப்பால் சென்று தமிழ்மக்களின் அரசியல் உரிமைகள் பற்றி அரசாங்கமும் தென்பகுதி சிங்கள அரசியல் தலைமைகளும பேச மறுக்கின்றன.

தென்பகுதி அரசியல் கட்சிகள் அதிகாரப் போட்டியில் கவனம் செலுத்துகின்றனவே தவிர இனப்பிரச்சினை தீர்வில் நாட்டம் கொள்ளவில்லை.

இதேநேரம், பொதுக்கட்டமைப்பைத் தடுத்து நிறுத்தியது சமாதானப் பேச்சை ஆரம்பிப்பதற்கான சாதகமான சூழ்நிலையல்ல.

இதற்குப் பதிலளித்த ஸ்ரீபன் இவான்ஸ், வோல்டர் வில்ரன் ஆகியோர் பொதுக்கட்டமைப்பு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைமுறைக்கு வரும் என நம்பிக்கை தெரிவித்த தோடு சமாதானப் பேச்சை ஆரம்பிப்பதற்கான அழுத்தங்களை அரசாங்கத்திற்கு வழங்குவதாகவும் தெரிவித்தனர்

## நாகர்..

உள்ள பற்றைக் காடுகளைத் துப்புரவு செய்த விடுதலைப் புலிகள் இராணுவத்தினரின் நிலைகளுக்கு அருகில் காவலரண்களை நிறுவியிருப்பதாகக் கண்காணிப்புக் குழுவினரிடம் இராணுவத் தரப்பு முறைப்பாடு செய்திருந்தது.

இதனை அடுத்து நாகர்கோவில் முன்னரங்க நிலைகளுக்குச் சென்ற போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ்.மாவட்ட கண்காணிப்புக் குழுவினர் நாகர்கோவில் பகுதியில் உள்ள விடுதலைப் புலிகளின் எல்லை காவலரண்கள் முன் நகர்த்தப்படவில்லை என அறிவித்துள்ளனர். (32)

## உயர்நீதிமன்றத்தின்..

2005 ஆண்டே தேர்தல் ஆண்டாகத் தாம் தீர்மானித்துள்ளதாக உயர்நீதிமன்றத்திற்குத் தெரிவித்துள்ள நிலையில் 2006ஆம் ஆண்டே தேர்தல் ஆண்டெனக் கூறும் சனாதிபதி சந்திரிகாவிற்கு உயர்நீதிமன்றத்தீர்ப்பு முக்கியத்துவம் மிக்க தொன்றாக அமையவுள்ளது.

உயர்நீதிமன்றத்தீர்ப்பும் சனாதிபதி சந்திரிகாவின் விருப்பிற்கு மாறானதாக அமையும் பட்சத்தில் அவர் பல அரசியல் நெருக்கடிக்கு உள்ளாகலாம் என எதிர்பார்க்கப் படுகின்றது.

இந்நிலையிலேயே உயர் நீதிமன்றத்தீர்ப்பை ஆவலுடன் எதிர்பார்க்கும் அவர் தீர்ப்புப் பாதமாக அமையும் எனக் கருதும் நிலையில் பாராளுமன்றத்தையே கலைத்துவிடும் அளவிற்கு ஆலோசனையை மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

**செப்ரெம்பர் 01 இல் வீறுகொண்ட தமிழினமே விரைந்திடு கிளிநொச்சிக்கு**

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 26 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.